மோட்டார் வாகன விபத்து கோருரிமை சிறப்பு சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர்

முன்னிலை : திருமதி. **S. மோகனாம்பாள்,** எம்.ஏ., பி.எட்., எம்.எல்.,

சிறப்பு நீதிமன்ற சார்பு நீதிபதி

2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள் திங்கள் கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 சோபகிருது வருடம் தை மாதம் 08 ம் நாள்

எம்.சி.ஓ.பி.எண் : 1098/2018

S. காயத்திரி தேவி ... மனுதாரர்

/ எதிர் /

1. A. T. முருகன்
2. M/s சைராக் டிராவல்ஸ் கம்பெனி பிரதிநிதியாக அதன்
   பங்குதாரர் பிரடிக்மேக்வானா
3. M/s தி நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

* 4. K. வேலுசாமி

* 5. M/s ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் .... எதிர்மனுதாரர்கள்

(* இடைக்கால மனு எண்.03/2022, நாள்: 09.12.2022 ன்படி திருத்தம் செய்யப்பட்டது)

(a)	இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி:	S. காயத்திரி தேவி, த/பெ P. ராஜகோபால், இந்து, வயது சுமார் 59, கதவு எண்.CIF3, Bougain வில்லா அப்பார்ட்மெண்ட்ஸ், K. வடமதுரை, கோயமுத்தூர் - 641 017.
(b)	எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி:	1) A. T. முருகன், த/பெ ஆறுமுகசாமி, இந்து, வயது சுமார் 37, கதவு எண்.653, வைக்கம் பெரியார் நகர், ஆரணியபுரம், மதுரை - 641 012. 2) M/s சைராக் டிராவல்ஸ் கம்பெனி பிரதிநிதியாக அதன் பங்குதாரர் பிரடிக்மேக்வானா, முழு வயது, கதவு எண்.163, பிரிக் பீல்டு செல்டர்ஸ், பெண்டிகானா ஹள்ளி, ஆனிக்கல் தாலுக்கா, பெங்களூர். 3) M/s தி நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், முதல் தளம், போவிங், SPS பில்டிங்ஸ்,

		கதவு எண்.185, அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 002, மேக்மில்லன் ஹவுஸ், 2 வது தளம், "B" பிளாக், கதவு எண்.21, பட்டுடாஸ் ரோடு, சென்னை, தமிழ்நாடு - 600 002. 4) * K. வேலுசாமி, த/பெ காளியப்பன், இந்து, வயது சுமார் 51, கதவு எண்.29, மேற்கு வீதி, ஊத்துக்குழி, பெருந்துறை தாலுக்கா, திருப்பூர் - 638 751. 5)* M/s ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், பிரதிநிதியாக அதன் மேலாளர் ரிலையன்ஸ் சென்டர் சவுத்விங்க், 4 வது தளம், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, சாண்டாக்ரூஸ் (கிழக்கு) மும்பை. (*இடைக்கால மனு எண்.03/2022, நாள்: 09.12.2022 ன்படி திருத்தம் செய்யப்பட்டது)
(c)	பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி:	3) M/s தி நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், முதல் தளம், போவிங், SPS பில்டிங்ஸ், கதவு எண்.185, அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு - 600 002, மேக்மில்லன் ஹவுஸ், 2 வது தளம், "B" பிளாக், கதவு எண்.21, பட்டுடாஸ் ரோடு, சென்னை, தமிழ்நாடு - 600 002. 5)* M/s ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், பிரதிநிதியாக அதன் மேலாளர் ரிலையன்ஸ் சென்டர் சவுத்விங்க், 4 வது தளம், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, சாண்டாக்ரூஸ் (கிழக்கு) மும்பை. (*இடைக்கால மனு எண்.03/2022, நாள்: 09.12.2022 ன்படி திருத்தம் செய்யப்பட்டது)
(d)	மாநகர போக்குவரத்து கழகம் (அ) இதர இழப்பீடு தொகை செலுத்தத்தக்க எதிர்மனு தாரர்கள் பெயர் மற்றும் முகவரி:	இம்மனுவிற்கு பொருந்தத்தக்கதல்ல
(e)	இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி	08.06.2018

(f)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி	**22.01.2024**
(g)	பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம்	**₹.6,08,930/- (ரூபாய் ஆறு இலட்சத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது மட்டும்)**
(h)	வட்டி விகிதம்	7.5%
(i)	எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும்	08.06.2018
(j)	செலவுத்தொகை விபரம் ஏதாவது இருப்பின்:	மனுவிற்கான முத்திரை கட்டணம் ரூ. 5462.00 வக்காலத்திற்கானமுத்திரை கட்டணம் ரூ. 10.00 வழக்கறிஞர் கட்டணம் ரூ. 13089.00 -------------------------- மொத்தம் ரூ. 18561.00
(k)	உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்	4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் இழப்பீட்டுத் தொகை முழுவதையும் வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வைப்பீடு செய்ய வேண்டும்.
(l)	மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம்	பொருந்தத்தக்கதல்ல
(m)	இழப்பீட்டு தொகை எதன் மூலமாக, எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்	இழப்பீட்டுத் தொகையை இந்நீதிமன்றத்திற்கான வங்கி கணக்கு எண் கோயமுத்தூர் மாவட்டம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா பிரதான கிளை A/c.35988204194 IFSC Code எண். SBIN0000827 என்ற கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.
(n)	இழப்பீட்டு தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம்	4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை முழுவதையும் வைப்பீடு செய்த பின்பு மனுதாரர் இழப்பீட்டு தொகை முழுவதையும் உடனடியாக எடுத்துக்கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
(o)	எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு	இல்லை

	தொகைக்கான வட்டி கோருரிமையருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின்	
(p)	இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம்	₹.9374/-
(q)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம்	இல்லை
(r)	திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம்	₹.3,912/-

இம்மனுவில் மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு. T.V. ரத்தினக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு. V. கோபாலகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், இறுதியாக என் முன்னிலையில் 18.01.2024 நாளன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் எனது சீரிய ஆய்விற்கு உட்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பகரும்

<u>உத்தரவு</u>

30.10.2017 ஆம் தேதியில் நடந்த சாலை விபத்தில் காயமடைந்த மனுதாரர் இழப்பீடாக ரூ.10,00,000/- கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

2. மனுவின் சாராம்சம்:

மனுதாரர் தனது மகள் பிரசவத்திற்கு உதவ வேண்டி கோயமுத்தூரிலிருந்து 30.10.2017 ஆம் தேதி மதியம் சுமார் 11.00 மணியளவில் பேருந்து பதிவு எண் KA 51 D 7187 ல் ஏறி புறப்பட்டுச் சென்றார். மேற்படி பேருந்தை 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்றார். அவர் NH 544 ல் சேலம் நோக்கி சென்று

கொண்டிருந்த பொழுது ரிலையன்ஸ் பெட்ரோல் பங்குக்கு பக்கத்தில் ஒரு மேம்பாலம் வந்தது. அப்பொழுது 1ம் எதிர்மனுதாரர் மதியம் 12.30 மணியளவில் வண்டியின் வேகத்தைக் குறைக்காது அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வண்டியை ஓட்டி மேம்பாலத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் மனுதாரருக்கு உடல் முழுக்க அடிபட்டது மற்றும் வலது கால் எலும்பு முறிந்து விட்டன. மனுதாரர் உடனடியாக பெருந்துறை கிருஷ்ணா மெக்கல் சென்டர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். விபத்து சமயத்தில் மனுதாரரின் வயது 59. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரே அதன் ஓட்டுநர் என்ற வகையில் காரணமும் பொறுப்பும் ஆவார். மேற்படி விபத்து குறித்து பெருந்துறை காவல் நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது பதியப்பட்ட முதல் தகவலறிக்கை எண்.627/2017 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் KA 51 D 7187 வாகனத்தின் ஓட்டுநர் என்ற முறையிலும், 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையிலும், 3ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டாளர் என்ற முறையிலும், அனைவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவர்.

3. 3ம் எதிர்மனுதாரரின் எதிர்உரையின் சுருக்கம்:

மனுதாரர் மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நிகழ்ந்தது என்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். பதிவு எண் பெறாத சுசுகி ஆக்சஸ் வண்டியை மேம்பாலத்தின் உள்ளே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்ல எந்தவித சைகையும் செய்யாமல் இண்டிகேட்டரும் போடாமல் திடீரென மனுதாரரது வலது பக்கம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் முருகன் விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் 4ம் எதிர்மனுதாரர்

வேலுச்சாமி மீது புகார் கொடுத்துள்ளார். 4ம் எதிர்மனுதாரர் வேலுச்சாமி மீது போலீசார் புலன் விசாரணைக்கு பின்னிட்டு முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரரின் வயது, காயம், தொழில், வருமானம், ஊனம் ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகம். ஆகையால், இம்மனுதாரர் கோரும் விபத்து தொகை எதுவும் 3ம் எதிர்மனுதாரர் செலுத்தக் கடமைப்பட்டவர் அல்ல. ஆகையால், இம்மனு 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

4. இம்மனுவில் ஆராயவேண்டிய பிரச்சினை யாதெனில் :

1) மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்து முதல் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது தானா ?

2) எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரா ?

3) மனுதாரருக்கு கொடுக்கப்பட வேண்டிய இழப்பீடு யாது ?

5. இம்மனுவில் மனுதாரரின் தரப்பில் மனுதாரர் காயத்ரி தேவி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், ஈரோடு, பெருந்துறை, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கருப்புசாமி எ.ம.சா.1 ஆகவும், மதுரை அவனியாபுரம் ஓட்டுநர் முருகன் எ.ம.சா.2 ஆகவும், பெருந்துறை கிருஷ்ணா மெடிக்கல் சென்டர் Public Relation Officer கண்ணன் எ.ம.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு, எ.ம.சா.1 வாயிலாக எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும், எ.ம.சா.2 வாயிலாக எ.ம.சா.ஆ.6 மற்றும் எ.ம.சா.ஆ.7 சான்றாவணங்களும், எ.ம.சா.3 வாயிலாக எ.ம.சா.ஆ.8 மற்றும் எ.ம.சா.ஆ.9 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பு சம்மதத்துடன் நீ.ம.சா.ஆ.1 சான்றவாணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6 . **<u>பிரச்சினை எண்.1க்கான தீர்வு</u>** :

6.1 நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் Bimla Devi Vs Himachal Road Transport Corporation and Others என்ற வழக்கில் மோட்டார் வாகன விபத்து குறித்து மனு தாக்கல் செய்யும் கோருரிமையாளர்கள், விபத்து எவ்வாறு நடந்தது என்பது குறித்து சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யத் தேவையில்லை என்றும், பெரும்பான்மை நிலையை நிரூபித்தாலே போதும் என்றும் அறிவுறுத்தி உள்ளதன் அடிப்படையில் மோட்டார் வாகன விபத்து சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

6.2 மனுதாரர் தனது நிரூபண பிரமாணப் பத்திரிக்கையில் விபத்து நடந்த தேதியான 30.10.2017 ஆம் தேதி மதியம் சுமார் 11.00 மணியளவில் தனது மகள் பிரசவத்திற்கு உதவ வேண்டி கோயமுத்தூரிலிருந்து பேருந்து பதிவு எண் KA 51 D 7187 ல் ஏறி புறப்பட்டுச் சென்றதாகவும், மேற்படி பேருந்தை 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்றதாகவும், அவர் NH 544 ல் சேலம் நோக்கி சென்று கொண்டிருந்த பொழுது ரிலையன்ஸ் பெட்ரோல் பங்குக்கு பக்கத்தில் ஒரு மேம்பாலம் வந்ததாகவும், அப்பொழுது 1ம் எதிர்மனுதாரர் மதியம் 12.30 மணியளவில் வண்டியின் வேகத்தைக் குறைக்காது அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வண்டியை ஓட்டி மேம்பாலத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தில் தனக்கு உடல் முழுக்க அடிபட்டது மற்றும் வலது கால் எலும்பு முறிந்து விட்டதாகவும், தான் உடனடியாக பெருந்துறை கிருஷ்ணா மெக்கல் சென்டர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் சொல்லியுள்ளார்.

6.3 மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 முதல் தகவலறிக்கையைப் பரிசீலித்ததில் மனுதாரர் காயத்ரி தேவி கடந்த 30.10.2017 அன்று மதியம் 12.30 மணியளவில் முதல் எதிர்மனுதாரர் மற்றும் புகார்தாரரான முருகனால் ஓட்டப்பட்ட இரண்டாம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான

EVACAY OMNI BUS பதிவு எண் KA 51 D 7187 SCANIA என்ற பேருந்தில் பயணியாகச் சென்ற போது மேற்படி பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கோவை - சேலம் NH 544 தேசிய நெடுஞ்சாலையில் ரிலையன்ஸ் பங்க் எதிரிலுள்ள மேம்பாலத்தின் முன்னால் மேற்படி பேருந்து சென்ற போது அதே திசையில் SUZUKI ACCESS வண்டியை நான்காம் எதிர்மனுதாரர் வேலுசாமி எவ்வித சைகையும் செய்யாமல் இண்டிகேட்டரும் போடாமல் ஓட்டி வந்து மேம்பாலத்தின் உள்ளே செல்ல திடீரென்று வலது பக்கம் திருப்பியதால் மேற்படி சுசுகி வண்டியில் மோதாமல் இருக்க முதல் எதிர்மனுதாரர் தான் ஓட்டிய பேருந்தை வலப்பக்கம் திருப்பிய போது மேம்பாலத்தின் மீது பஸ் மோதியதில் பேருந்தில் பயணித்த வேறு பயணிகளுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், மனுதாரருக்கு மட்டும் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது தெரியவருகிறது. ம.சா.ஆ.1 முதல் தகவலறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நபரான SUZUKI ஓட்டுநர் மற்றும் உரிமையாளரான நான்காம் எதிர்மனுதாரரும், மேற்படி SUZUKI வாகனத்தின் காப்பீடுதாரரான ஐந்தாம் எதிர்மனுதாரரும் மூன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட IA.2/21, நாள் 10.10.2022 ல் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு படிக்கு தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்படி இருவரும் தோன்றாதரப்பினர் ஆகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. புகார்தாரரும், முதல் எதிர்மனுதாரருமாகிய பேருந்து ஓட்டுநர் மற்றும் பேருந்து உரிமையாளரான இரண்டாம் எதிர்மனுதாரர் ஆகியோர் தோன்றாதரப்பினராகியுள்ளனர். எனினும் மேற்படி முதல் எதிர்மனுதாரர் மூன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டதில் அவர் விபத்து நடந்த விதம் குறித்து வினவப் படுகையில் விபத்து சமயம் தனக்கு இடதுபுறத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் எந்த சைகையும் செய்யாமல் திடீர் என வலது புறமாக வாகனத்திற்கு முன்னால் செல்ல முற்பட்டதால் தான் அவர் மீது இடிக்கக் கூடாது என்பதற்காக வலதுபுறம் பேருந்தைத் திருப்பியதாகவும், அப்போது அந்த இருசக்கர வாகன ஓட்டி வலது புறமாக வந்து பேருந்தின் மீது மோதி விழுந்து விட்டதாகவும், பேருந்திற்கும் பாலத்திற்கும் குறுகிய இடைவெளி இருந்ததால் தான்

பிரேக் அடித்தும் பேருந்து பாலத்தின் சுவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார். குறுக்கு விசாரணையில் இருசக்கர வாகனம் பேருந்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக முதல் தகவலறிக்கையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று எ.ம.சா.2 ஒப்புக் கொண்டுள்ளதாலேயே அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கில் பொய்ப் புகார் கொடுத்துள்ளார் என்று கருதவியலாது. மேலும் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, பெருந்துறை நீதிமன்றத்தில் STC.7/20 என்ற வழக்கில் பதிவு எண் இல்லாத SUZUKI 125 ஓட்டுநரான நான்காம் எதிர்மனுதாரர் வேலுச்சாமி மீது தான் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லி மேற்படி இறுதி அறிக்கை, மாதிரி வரைபடம், பார்வை மகஜர், நான்காம் எதிர்மனுதாரர் ஓட்டிய வாகனத்தின் ஆய்வறிக்கை மற்றும் மனுதாரர் பயணித்த இரண்டாம் எதிர்மனுதாரர் வாகனமான பேருந்தின் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றின் நகல்களை எ.ம.சா.ஆ.1 முதல் 5 ஆகத் தாக்கல் செய்துள்ளார். எ.ம.சா.2 காவல் உதவி ஆய்வாளர் தமது குறுக்கு விசாரணையில் முதல் தகவலறிக்கை மற்றும் குற்றப் பத்திரிக்கையில் பேருந்தும் SUZUKI வாகனமும் மோதிக் கொண்டதாகச் சொல்லப்படவில்லை என்றும், எ.ம.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் விபத்து நடைபெற்ற இடத்தில் SUZUKI வாகனம் இருந்ததாகக் காட்டப்படவில்லை என்றும், SUZUKI வாகனம் இருந்ததாகக் காட்டப்படவில்லை என்றும், SUZUKI வாகனம் 13.12.2017 அன்று தான் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றும் ஒப்புக் கொண்டுள்ளார் என்பதாலும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1, பெருந்துறை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளது என்பதாலும், முதல் எதிர்மனுதாரருக்குப் பதிலாக வேலுச்சாமி என்பவரை தரப்பினராகச் சேர்த்து வழக்கு ஜோடனை செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது, மேற்படி வாதம் ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நபராகிய நான்காம் எதிர்மனுதாரர் இம்மனுவில் தரப்பினராகச் சேர்க்கப்பட்டிருப்பினும் அவர்

தோன்றாதரப்பினராகியுள்ளார். மேற்படி சுசுகி வாகனத்தின் காப்பீடுதாரரான ஐந்தாம் எதிர்மனுதாரரும் தோன்றாதரப்பினராகியுள்ளார். ம.சா.ஆ.1 முதல் தகவலறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில் 4, 5 எதிர்மனுதாரர்கள் சேர்க்கப்பட்ட பிறகும் முதல் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு மட்டுமே விபத்துக்கு காரணம் என்று வாதிடப்பட்டிருப்பினும், தகுந்த ஆதார ஆவணங்களோ சாட்சியங்களோ முன்னிறுத்தப்படவில்லை. அதே சமயம் ம.சா.ஆ.8 அறிவிப்பைப் பெற்றுக் கொண்டும் 1 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்கள் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்பதாலேயே முதல் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது எனத் தீர்மானிக்கவியலாது. மாதிரி வரைபடத்தில் வபத்து நடந்த இடம் குறித்து சொல்லப்பட்டுள்ளதைப் பார்வையிடுகையில் விபத்தைத் தவிர்க்கும் நோக்கில் முதல் எதிர்மனுதாரர் பேருந்தை வலதுபுறமாகத் திருப்புகையில் கட்டுப்பாட்டை இழந்து பாலத்து சுவரில் மோதியிருப்பது தெரியவருகிறது. அதேசமயம் எ.ம.சா.ஆ.5 வாகன ஆய்வறிக்கையில் பேருந்துக்கு ஏற்பட்டுள்ள சேதங்களையும் எ.ம.சா.ஆ.6 வாகன ஆய்வறிக்கையில் SUZUKI வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்களையும் பார்வையிடுகையிலும் விபத்து முதல் எதிர்மனுதாரர் சொல்லியுள்ள வகையில் தான் விபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்பு அதிகம் என்பதால் நான்காம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் நிகழ்ந்தது என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கின்றது.

7. பிரச்சினை எண். 2 க்கான தீர்வு :

ம.சா.ஆ.2 காப்பீட்டுச் சான்று மற்றும் எ.ம.சா.ஆ.5 வாகன ஆய்வறிக்கை வாயிலாக புகார்தாரரும், இம்மனுவின் முதல் எதிர்மனுதாரருமான முருகன், விபத்து சமயம் இரண்டாம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், மூன்றாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதுமான பேருந்தை தகுந்த ஓட்டுநர் உரிமத்துடன் ஓட்டிச் சென்றார் என்பது தெரியவருகிறது. எ.ம.சா.ஆ.4 வாகன ஆய்வறிக்கை வாயிலாக நான்காம் எதிர்மனுதாரர் பதிவு செய்யப்படாத SUZUKI ACCESS வாகனத்தை தகுந்த ஓட்டுநர் உரிமத்துடன் ஓட்டிச் சென்றார்

என்பதும், ஆனால் வாகன ஆய்வின் போது காப்பீட்டுச் சான்றை ஒப்படைக்கவில்லை என்பதும் தெரியவருகிறது. இந்நிலையில் நான்காம் எதிர்மனுதாரரின் வாகனமானது ஐந்தாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 24.10.2017 முதல் 23.10.2018 வரை காப்பீடு செய்யப்பட்டதாகச் சொல்லி மூன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு மூன்றாம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த IA.2/21 ல் 10.10.2022 ல் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் பேரில் ஐந்தாம் எதிர்மனுதாரர் நிறுவனம் கட்சி சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேற்படி எதிருரையுடன் நான்காம் எதிர்மனுதாரர் வாகனம் ஐந்தாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதற்கான நகலும் இணைக்கப்பட்டுள்ளது. எனவே விபத்துக்கு காரணமான வாகன ஓட்டுனரான நான்காம் எதிர்மனுதாரரும் அதன் உரிமையாளரான ஐந்தாம் எதிர்மனுதாரரும் மட்டுமே மனுதாரருக்கு இழப்பீடு செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

8. பிரச்சினை எண்.3 க்கான தீர்வு :

8.1 மனுதாரர் தன் மனுவில் வருவாய் இழப்பிற்காக ரூ.30,000/-ம், பகுதி வருவாய் இழப்பிற்காக ரூ.20,000/-ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.6,000/-ம், ஊட்டச்சத்து செலவிற்காக ரூ.25,000/-ம், ஆடை மற்றும் பொருட்கள் சேதத்திற்காக ரூ.10,000/-ம், மருத்துவ செலவுகளுக்காக ரூ.3,00,000/-ம், மனவேதனை மற்றும் கஷ்டங்களுக்கான இழப்பிற்காக ரூ.2,00,000/-ம், எதிர்கால மருத்துவ செலவுகளுக்காக ரூ.50,000/-ம், வலி மற்றும் துன்பத்திற்கான இழப்பிற்காக ரூ.2,50,000/-ம், தொடரும் அல்லது நிரந்தர ஊனத்திற்கான இழப்பிற்காக ரூ.2,00,000/-ம், சம்பாதிக்கும் திறன் இழப்பிற்காக ரூ.1,00,000/-ம் என ஆக மொத்தம் ரூ.11,91,000/- என கணக்கீடு காட்டி தன்னுடைய கோருரிமையின் அளவை ரூ.10,00,000/- க்குள் கட்டுப்படுத்திக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

8.2 மோட்டார் வாகன விபத்து சட்டம் 1988 ன் கீழ் வழங்கப்படும் இழப்பீடானது நியாயமானதாகவும், கூடுமான வரையில் விபத்துக்கு முன்பு கோருரிமையாளர் இருந்த நிலைக்கு

அவரை மீட்டடைவு செய்யும் வகையிலும் இருத்தல் வேண்டும் என்பதே இயற்கை நெறி கோட்பாடாகும். AIR 1970 (SC) 376 C.K. Subramaniya Ayyar Vs. Kunhikuttan Nayak என்ற வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் பகன்றுள்ளதை போல் விபத்துக்கான இழப்பீடு கோரும் வழக்குகளில் மனுதாரர் உடல் காயங்களுக்கு மட்டுமின்றி, காயங்களால் ஏற்பட்ட இழப்புகளுக்கும் இழப்பீடு பெற வேண்டும். அதாவது விபத்துக்குள்ளானோர் ஒரு முழுமையான வாழ்க்கையை விபத்துக்கு பின்னிட்டும் வாழ வழி செய்யும் வகையிலும் அவர் சாதாரணமாக அடையக்கூடிய வசதிகளையும், காயங்களின் காரணமாக ஏற்பட்ட இயலாமையால் அவருக்கு ஏற்பட்ட பொருள் இழப்பையும் சரியீடு செய்யும் வகையிலும், அதே சமயம் விபத்துக்குள்ளானவர் முடிந்த வரை இயல்பான வாழ்க்கைக்கு திரும்ப போதுமானதாகவும், நியாயமானதாகவும் இழப்பீடு இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே இழப்பீட்டிற்கான வரம்பு தீர்மானிக்கப்பட வேண்டும். இம்மனுவில் நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம், மாண்புமிகு உயர்நீதிமன்றம் ஆகியவை வழங்கியுள்ள முன்தீர்ப்பின் அடிப்படையில் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் மனுதாரர் இழப்பீடு பெற அருகதை உள்ளவர் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கின்றது.

9. நிரந்தர ஊனத்திற்காக :

விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனத்தை நிர்ணயம் செய்ய மனுதாரர் மருத்துவக் குழுமம் முன்பு ஆஜராகிப் பெற்ற ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆவணமாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் மனுதாரருக்கு 35% நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக மருத்துவக் குழுமம் சான்றிதழ் வழங்கியுள்ளது தெரிய வருகிறது. மேற்படி ஊனம் மனுதாரரின் வருவாயை இழக்கச் செய்யும் வகையில் உள்ளதாக மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிறுத்தப்படவில்லை. எனவே, நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2020 (1) TNMAC 617 Chinnathambi Vs Dheepa and another என்ற முன்தீர்ப்பின் அடிப்படையில் நிரந்தர ஊனத்திற்கான இழப்பீட்டை சதவீத

அடிப்படையிலேயே நிர்ணயிக்க வேண்டியது அவசியம். ஆகவே, மனுதாரருக்கு வழங்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழின் அடிப்படையில் 1% ஊனத்திற்கு ரூ.5,000/- என்று கணக்கிட்டு மனுதாரருக்கு ஏற்பட்ட 35% நிரந்தர ஊனத்திற்காக 35 x ரூ.5,000= ரூ.1,75,000/-ஐ நிரந்தர ஊனத்திற்கான இழப்பீடாக வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

10. போக்குவரத்து செலவிற்காக :

மனுதாரரின் இருப்பிடம், விபத்து நடந்த இடம் மற்றும் விபத்திற்கு பிறகு அவர் அனுமதிக்கப்பட்ட மருத்துவமனை அமைந்துள்ள இடம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவமனை போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/-ஐ வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

11. ஊட்டச்சத்து செலவிற்காக :

மனுதாரருக்கு விபத்தின் காரணமாக வலது தொடையில் Right Supra Condylar Femur Fracture என்னும் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு அவரது ஊட்டச்சத்து செலவிற்காக ரூ.15,000/-ஐ வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

12. உடனிருந்தோர் செலவுத் தொகையாக :

மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்து மற்றும் காயங்கள் அடிப்படையில் கட்டாயம் அவரை கவனித்துக் கொள்ள உறவினர்கள் உடனிருந்திருக்க வேண்டும். ஆகவே உடனிருந்தோர் செலவு தொகையாக இத்தீர்ப்பாயம் ரூ.10,000/-ஐ வழங்கலாம் என தீர்மானிக்கிறது.

13. ஆடை மற்றும் பொருட்கள் சேதத்திற்காக :

மனுதாரர் தனது மனுவில் உடை மற்றும் பொருட்கள் சேதத்திற்காகவும் இழப்பீடு கோரியுள்ளார். ஆனால் ஆடை, ஆபரணங்கள் எவ்வளவு என்பதை நிர்ணயிக்கும் வகையில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மேற்படி சேதத்திற்காக ரூ.5,000/- வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

14. மருத்துவ செலவிற்காக :

மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 மருத்துவ பில்களின் படியான தொகை ரூ.1,50,648.44/- மற்றும் ம.சா.ஆ.7 மருத்துவ பில்களின் படியான தொகை ரூ.1,13,280/- என ஆக மொத்தம் மருத்துவ பில்களின் படியான தொகை ரூ.2,63,928.44/- என்ற தொகையை முழுமையாக்கி ரூ.2,63,930/-ஐ இழப்பீடாக வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

15. வலி மற்றும் வேதனைக்காக :

ம.சா.ஆ.3 காயச்சான்று, ம.சா.ஆ.4 விடுவிப்பு அறிக்கை ஆகியவற்றைப் பரிசீலித்ததில் மனுதாரருக்கு விபத்தின் காரணமாக வலது தொடையில் Right Supra Condylar Femur Fracture என்னும் எலும்பு முறிவு ஏற்பட்டது என்பதும், அதற்காக கங்கா மருத்துவமனையில் 30.10.2017 முதல் 04.11.2017 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்பதும், 31.10.2017 அன்று Open Reduction and Internal Fixation Right Distal Femur என்னும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்பதும், தொடர்ந்து Physio சிகிச்சை பெற்றுள்ளதும் தெரியவருகிறது. எனவே, மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.60,000/- வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

16. விபத்தினால் ஏற்பட்ட வருவாய் இழப்புக்காக :

மனுதாரர் விபத்து சமயம் இல்லத்தரசியாக இருப்பினும் வேலைக்காக ஆள் நியமிக்கும் பட்சத்தில் மாதம் ரூ.5,000/- கொடுத்திருக்கக் கூடும். விபத்தின் காரணமாக மனுதாரருக்கு வலது தொடையில் Right Supra Condylar Femur Fracture என்னும் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு வருவாய் இழப்பிற்காக 6 மாத காலத்திற்கான வருமானத்தை கணக்கிட்டு 6 x ரூ.5,000 = ரூ.30,000/- வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் மனுதாரரை கவனித்துக்கொள்ளவும், சமையலுக்காக வேலையாள் நியமித்து மாதம் ரூ.15,000/- செலவு செய்ததாக தெரிவித்துள்ளார்.

ம.சா.ஆ.14 ஆவணத்தில் மனுதாரர் ஓட்டுநரை நியமித்து மாதம் ரூ.10,000/- செலவு செய்ததாக தெரிவித்து பில்களை தாக்கல் செய்துள்ளார். தனி ஓட்டுநர் நியமனம் என்பது மனுதாரர் தன்னுடைய சுய சௌகரியத்திற்காக ஏற்படுத்திக் கொண்டது என்பதை மறுக்கவியலாது. மேலும் மேற்படி பணியாட்களை விசாரித்து நிரூபிக்கவும் மனுதாரர் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே ம.சா.ஆ.13 மற்றும் 14 ன் படியான பில் தொகைகள் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

17. விபத்தினால் ஏற்பட்ட வசதி இழப்பிற்காக :

எதிர்பாராமல் நடைபெற்ற விபத்தின் காரணமாக மனுதாரருக்கு ஏற்பட்ட காயம், மருத்துவ சிகிச்சை, மனுதாரருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட வசதி குறைவு மற்றும் மன உளைச்சல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வசதி இழப்பிற்காக ரூ.40,000/-ஐ வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

வ.எண்	இழப்பீட்டிற்கான தலைப்புகள்	தொகை விபரம்
1	நிரந்தர ஊனத்திற்காக	ரூ. 1,75,000/-
2	போக்குவரத்து செலவிற்காக	ரூ. 10,000/-
3	ஊட்டச்சத்து செலவிற்காக	ரூ. 15,000/-
4	உடனிருந்தோர் செலவுத் தொகையாக	ரூ. 10,000/-
5	ஆடைகள் மற்றும் பொருட்கள் சேதத்திற்காக	ரூ. 5,000/-
6	மருத்துவ பில் ம.சா.ஆ.6 மற்றும் 7 ன் படியான தொகை	ரூ. 2,63,930/-
7	வலி மற்றும் வேதனைக்காக	ரூ. 60,000/-
8	விபத்தினால் ஏற்பட்ட வருவாய் இழப்பிற்காக	ரூ. 30,000/-
9	விபத்தினால் ஏற்பட்ட வசதி இழப்பிற்காக	ரூ. 40,000/-
	மொத்தம்	ரூ.6,08,930/-

எனவே, மனுதாரருக்கு ரூ.6,08,930/- 7.5% வட்டியுடன் கிடைக்கத்தக்கது என்று பிரச்சினை

எண்.3 க்கு தீர்வு காணப்படுகிறது.

18. இறுதியாக, இம்மனு 1 முதல் 3ம் எதிர்மனுதாரர்களைப் பொறுத்து தள்ளுபடி செய்யப்படுகிறது. 4 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்களைப் பொறுத்து பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் இழப்பீட்டுத் தொகையான ரூ.6,08,930/-ஐ மனுதாக்கல் தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (மனு தள்ளுபடியாகி இருப்பின் மேற்படி காலம் நீங்கலாக) இம்மனுவின் செலவுத்தொகையையும் சேர்த்து இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்திற்கான வங்கி கணக்கு எண் கோயமுத்தூர் மாவட்டம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா பிரதான கிளை A/c.35988204194 IFSC Code எண்.SBIN0000827 என்ற கணக்கில் NEFT/RTGS முறையில் நேரடியாக வங்கி மாற்றம் மூலம் செலுத்தவேண்டும் என்றும், அவ்வாறு செலுத்திய பின்பு எதிர்மனுதாரர்கள் வங்கி அறிவுறுத்தலின் நகல் (Copy of Bank advice) ஒன்றை இத்தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கு அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படித் தொகை மற்றும் மனுதாரரின் செலவுத்தொகை மற்றும் மொத்த தொகைக்கான வட்டி ஆகியவைகள் செலுத்தப்பட்டவுடன் உடனடியாக மேற்படித் தொகைகளை மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் எனவும், மனுதாரர் இத்தீர்ப்பாயத்தை அணுகி உரிய வங்கி அறிவுறுத்தலைப் பெற்று, மேற்படி மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரின் வங்கி கணக்கான, பாங்க் ஆஃப் இந்தியா, சோமையம்பாளையம் கிளை, சேமிப்பு கணக்கு எண்.820410100008004, IFSCCode – BKID0008204-ல் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணத்தில் உபரி நீதிமன்ற கட்டணம் ரூ.3,912/- மனுதாரருக்கு திரும்ப வழங்க உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.13,089/-.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள்

இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S MOHANAMBAL
Digitally signed by S MOHANAMBAL
Date: 2024.01.23 18:38:22 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
சிறப்பு நீதிமன்ற சார்பு நீதிபதி,
கோயமுத்தூர்.

மனுதாரர் தரப்புச் சாட்சி :

ம.சா.1 – காயத்ரிதேவி (மனுதாரர்)

மனுதாரர் தரப்புச் சான்றாவணங்கள் :

ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை உண்மை நகல்
ம.சா.ஆ.2 காப்பீடு சான்று நகல்
ம.சா.ஆ.3 காயச் சான்றிதழ்
ம.சா.ஆ.4 விடுவிப்பு அறிக்கை அசல்
ம.சா.ஆ.5 மருத்துவர் பரிந்துரை சீட்டுகள்
ம.சா.ஆ.6 மருத்துவ பில்கள் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது.
ம.சா.ஆ.7 மருத்துவ பில்கள் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது.
ம.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்
ம.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பை 1 ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை
ம.சா.ஆ.10 வழக்கறிஞர் அறிவிப்பை 2 ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சல் உறை
ம.சா.ஆ.11 வழக்கறிஞர் அறிவிப்பை 3 ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை
ம.சா.ஆ.12 ஆம்புலன்ஸ் கட்டண ரசீது ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது
ம.சா.ஆ.13 வீட்டு உதவியாளர் சம்பள ரசீது ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது

ம.சா.ஆ.14 வாகன ஓட்டுநரின் சம்பள ரசீது ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது

ம.சா.ஆ.15 மனுதாரரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது

ம.சா.ஆ.16 மனுதாரரின் வருமான வரி நிரந்தர கணக்கு எண் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது

ம.சா.ஆ.17 மனுதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் முதல் பக்கம் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது

3 ம் எதிர்மனுதாரர் தரப்புச் சாட்சிகள்:

எ.ம.சா.1 - கருப்புசாமி, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், பெருந்துறை, ஈரோடு.

எ.ம.சா.2 - முருகன், ஓட்டுநர், அவனியாபுரம், மதுரை.

எ.ம.சா.3 - கண்ணன், Public Relation Officer, கிருஷ்ணா மெடிக்கல் சென்டர், பெருந்துறை.

3 ம் எதிர்மனுதாரர் தரப்புச் சான்றவாணங்கள்:

எ.ம.சா.1 - இறுதி அறிக்கை உண்மை நகல்

எ.ம.சா.2 - மாதிரி வரைபடம் உண்மை நகல்

எ.ம.சா.3 - பார்வை மகஜர் உண்மை நகல்

எ.ம.சா.4 - வேலுச்சாமி ஓட்டிய வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல்

எ.ம.சா.5 - KA 51 D 7187 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல்

எ.ம.சா.6 - எ.ம.சா.2 சாட்சியத்தின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது

எ.ம.சா.7 - எ.ம.சா.2 சாட்சியத்தின் ஓட்டுநர் உரிமம் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது

எ.ம.சா.8 - மனுதாரர் முதலுதவி சிகிச்சை பெற்றதற்கான மருத்துவர் சான்று

எ.ம.சா.9 - கிருஷ்ணா மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள்

<u>நீதிமன்ற தரப்புச் சான்றாவணங்கள்</u> :

நீ.ம.சா.ஆ.1 கோவை மருத்துவ கல்லூரி மருத்துவ வாரியத்தால்
வழங்கப்பட்ட மனுதாரரின் ஊனச்சான்றிதழ் அசல்

S MOHANAMBAL

Digitally signed by S MOHANAMBAL
Date: 2024.01.23 18:38:56 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
சிறப்பு நீதிமன்ற சார்பு நீதிபதி,
கோயமுத்தூர்.